திரு. ந. சௌந்திரபாண்டியன் : அரசாங்கத்திலிருந்து கேசவ நேரியில் வைக்க முடியாது என்று பதில் அனுப்பப்பட்டு இருக்கிறதா ? அதாவது அங்கே தண்ணீர் இல்லை, அதன் காரணமாக அங்கே வைக்க முடியாது என்று பதில் கொடுத்திருக்கிறார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே ஒரு இடத்தைப் பார்த்து பரிசீலனை செய்திருக்கிறார்கள். அபிஷேகப்பட்டியில் நெல்லையப்பர் கோவிலுக்குச் சொந்தமாக ஏற்கனவே ஒரு டயரி பாரம் கூட்டுறவு சொஸைட்டி அடிப்படையில் நடந்து கொண்டிருக்கிறது. இப்போது அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதைப் பரிசீலிக்காமல் அரசாங்கம் எவ்வித பதிலையும் சொல்ல முடியாது.

திரு. ந. சௌந்திரபாண்டியன் : அரசாங்கத்திலிருந்து அங்கு போதுமான தண்ணீர் வசதி இல்லையென்று பதில் வந்திருக்கிறது. ஆனால், புதைப்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி செய்ததிலே அங்கே அதிகமாகவே தண்ணீர் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இதை அரசாங்கம் தீவிரமாக பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அங்கே தண்ணீர் இருக்கிறதா, இல்லையா என்ற தகவல் என்னிடத்திலே இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால், அதற்கு பதில் சொல்ல முடியும்.

District boards (residuary staff)

* 1076 *Q.*—SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) what is the work of residuary staff of the defunct District Boards; and

(*b*) what is the position of staff working under the Regional Inspector of Local Boards?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The residuary staff sanctioned to the districts is for attending to the work left resultant on the abolition of the district boards, such as, transfer of assets and liabilities of the district boards to the Panchayat Unions, closure of the Provident Fund accounts of the former district board employees and their transfer to the Panchayat Unions, settlement of audit objections, etc.

(*b*) The staff working under the former Regional Inspectors of Municipal Councils and Local Boards have now been ordered to be absorbed in the newly formed Panchayat Development Branches in the District Collectorates and Panchayat Development Sections in divisional offices and constituted into a separate unit to be administered by the Collector of the district pending the constitution of a service in which these posts will be encadred.